1972 ஆகஸ்ட் 19]

சுருக்கெழுத்து தேர்வு பாட முறையைத் திருத்தியமைத்தல்.

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சுருக்கெழுத்து தேர்வுக்கான பாடமுறையைத் திருத்தி யமைக்கக் குழு ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பாடத்திட்டத்தை மாற்ற அமைக்கப்பட்ட குழு இன்னும் அதன் இறுதியான முடிவுகளை தெரிவிக்கவில்லை.

Playground for High Schools

* 84. *Q.*—Thiru M. ARUMUGASWAMI (on behalf of Thiru D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any rule prescribing the minimum size of playground to be attached to a High School;

(*b*) the number of High Schools in this State, that do not conform to this rule; and

(*c*) the number of High Schools which have no playground at all?

உயர்நிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டுத் திடல்.

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் .

(அ) ஓர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த விளையாட்டுத் திடலின் குறைந்த அளவுப் பரப்பினை வரையறுக்கும் விதி ஏதேனும் உள்ளதா ?

(இ) இம்மாநிலத்தில், இவ்விதியினைப் பின்பற்றாத உயர் நிலைப் பள்ளிகள் எத்தனை ?

(உ) விளையாட்டுத் திடலே இல்லாத உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம், மாணவர் பள்ளிக்கு குறைந்த அளவு 5 ஏக்கர். மாணவிகளின் பள்ளிக்கு 3 ஏக்கர்.

(இ) 1870 பள்ளிகள்.

(உ) 211 பள்ளிகள்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இப்பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் எத்தனை பேர்கள் இருக்க வேண்டும் என்று விதி ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட முறையில் விதி இருக்கிறது. மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு ஒன்று, இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால், விதிமுறைகளைப்பற்றி அறிவிக்க இயலும். 2653 உயர்நிலைப் பள்ளிகளில் 783 உயர்நிலைப்பள்ளிகள் 5 ஏக்கருக்கு மேற்பட்ட இடத்தைப் பெற்றிருக்கின்றன. மீதியுள்ள 1870 பள்ளிகள் 1 ஏக்கர், 2 ஏக்கர் அல்லது 3 ஏக்கர் என்ற அளவில் இடம் பெற்றிருக்கின்றன. 211 பள்ளிகளுக்குத்தான் அறவே சொந்தமான விளையாட்டு இடங்கள் இல்லை. ஆனால் பக்கத்தில் இருக்கிற பொது விளையாட்டு இடங்களையும் மற்றவைகளையும் பயன்படுத்தி வருகின்றன. எப்படியும் விளையாட்டு இடம் இருக்க வேண்டும் என்பதைக் கல்வித் துறை வற்புறுத்தி வருகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, எங்கள் கிராமத்தில் என்னுடைய முயற்சியால் 6 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தப்பட்டது. அதற்கு 5 ஏக்கர் நிலமும் 10 ஆயிரம் ரூபாய் பணமும் கொடுப்பதாகச் சொல்லி ஆரம்பிக்கப்பட்டது. 5 ஏக்கர் நிலம் வாங்குவதற்கு முடியவில்லை. நில ஆர்ஜிதம் செய்வதன் மூலமாகத் தான் நிலம் கிடைக்குமே தவிர, மற்ற வழியில் நிலம் கிடைக்காத நிலை இருக்கிறது. அதற்கான பணம் கொடுக்கிறோம், நில ஆர்ஜிதம் செய்து கொடுங்கள் என்று அரசிடம் சொல்லி 3 ஆண்டுகள் ஆகியும் எந்த வித ஏற்பாடும் நடக்கவில்லை. தக்க நடவடிக்கை எடுத்து நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 5 ஏக்கர் நிலம் கட்டாயம் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். 5 ஏக்கர் நிலமும் 10 ஆயிரம் ரூபாயும் இல்லாமல் எந்தப் பள்ளிக்கும் அனுமதி வழங்கக்கூடாது என்ற முறை கையாளப்பட்டு வருகிறது. 5 ஏக்கர் நிலம் இருந்தால், அதைக் கையகப்படுத்திக் கொடுக்க முடியும் என்றால், அதற்கான நடவடிக்கை எடுக்கலாம். அதுபற்றிய தகவலைத் தனியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுப்பார்களானால், தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, பெரும்பாலான பள்ளிகளில், முக்கியமாக நகரங்களில் உள்ள பள்ளிகளில் உள்ள விளையாட்டுத் திடல்களில் கலைக் காட்சி, கலைக் கண்காட்சி என்று பள்ளிக்குப் புறம்பான, விரும்பத்தகாத காரியங்கள் நடைபெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு நடத்தப்படுவதால் விரும்பத் தகாத விளைவுகள் ஏற்படுகின்றன என்று அரசுக்குப் புகார் ஏதாவது வந்திருக்கிறதா ? அப்படியாயின், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க முடிவு செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த மாதிரிப் புகார் எதுவும் அரசுக்கு வந்ததாகத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால், அப்படிப்பட்ட புகார் வந்திருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்கலாம். ஆனால் பொதுவாக பள்ளியில் விளையாட்டு இடங்களை இன்னின்ன காரியங்களுக்குத் தான் உபயோகிக்கலாம் என்ற முறையில் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அக்கட்டுப்பாடுகளை மீறினால், தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவரவர்களே, 200க்கு மேற்பட்ட பள்ளிகளில் விளையாட்டுத் திடலே அமையவில்லை என்று தெரிகிறது. அப்படிப்பட்ட பள்ளிகள் பெரும்பாலும் நகரங்களில் தான் இருக்க முடியும். அந்தப் பள்ளிகளை நகரப் பகுதியிலிருந்து கிராமப்புறப் பகுதிகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல், அப்படிப் பட்ட விளையாட்டுத் திடல் அமையாத பள்ளிகள் பெரும்பாலும்

நகரப்பகுதியில் தான் இருக்கின்றன. சென்னை மாநகரைப் பொறுத்த வரையில், பல இடங்களில் சிறு சிறு தெருக்களில் கூட உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. திருவல்லிக்கேணி. மைலாப்பூர் போன்ற இடங்களில் அமைந்துள்ள அப்படிப்பட்ட பள்ளிகள் கடற்கரைப் பகுதியைத் தான் விளையாட்டு இடங்களாகப் பயன் படுத்தி வருகின்றன. இரண்டு மூன்று பள்ளிகள் சேர்ந்தும் ஒரு இடத்தைப் பயன்படுத்தி வருகின்றன. இந்தப் பள்ளிகளையெல்லாம் சென்னை நகரை விட்டு அப்பால் கொண்டுபோவது என்பது இயலாத ஒன்று. அப்படிப்பட்ட பள்ளிகள் இரண்டு, மூன்று சேர்ந்து ஒரு விளையாட்டு இடத்தைப் பயன்படுத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தவிர மாநகராட்சி மன்றம் சார்பாக பொது விளையாட்டு இடங்கள் ஏற்படுத்தப்பட்டு அவைகளையும் பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்யப்பட்டிருக் கிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, பள்ளிக்கூட நேரத்தில் உடற்பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறதா, அல்லது பள்ளிக்கூட நேரத்துக்குப் பிறகு உடற்பயிற்சி அளிக்கப்படுகிறதா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி பள்ளிக்கூட நேரத்திற்குப் பிறகு பயிற்சி அளிக்கப்படுமானால், உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு வேலை நேரம் எவ்வளவு, உடற்பயிற்சி அளிப்பது மட்டும் தான் அவர்களுக்கு வேலையா, உடற்பயிற்சி வகுப்புக்கு மாணவர்கள் ஒழுங்காக வருகிறார்களா, அப்படி ஒழுங்காக வராத மாணவர்களுக்கு மார்க்குகள் குறைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் வேலை நேரங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் கணக்கிட்டுப்பார்த்து, அவர்கள் எவ்வளவு பேர்களுடைய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். சில சமயங்களில் பள்ளி நேரத்தில் ஓய்வு ஏற்படுகிறபோது மாணவர்களுக்கு உடற்பயிற்சி அளிக்க வேண்டும். பள்ளி நேரம் முடிந்ததற்குப் பிறகும் உடற் பயிற்சி அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதற் கிடையிலே கூட முதலுதவி அளிப்பது போன்ற சில பல பாடங் களையும் உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியவர் களாக இருக்கிறார்கள். மற்ற ஆசிரியர்கள் வராத நேரங்களில்

1972 ஆகஸ்ட் 19]

அந்த வகுப்புகளில் நேரம் விரைகாமலிருக்க மேற்பார்வையிடுகிற பொறுப்பும் சில சமயங்களில் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : நாங்கள் எல்லாம் படிக்கிறபோது 'டிரில் கிளாஸ்' இருந்ததே, அது தான் இது.

Somanathapuram T.B. Hospital

* 85. *Q.*--THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that a T.B. Specialist has not been appointed in the Somanathapuram T.B. Hospital, Ramanathapuram district; and

(*b*) if so, the reasons therefor?

சோமநாதபுரம் காசநோய் மருத்துவமனை.

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுர மாவட்ட சோமநாதபுரம் காசநோய் மருத்துவமனையில் காசநோய் மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர் நியமிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) காச நோய் மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர் கிடைக்காமையால் 20–9–1969 முதல் 24–3–1972 வரை அத்தகுதி பெற்ற மருத்துவர் நியமிக்கப்படவில்லை. 25–3–1972 முதல் காச நோய் மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர் இம்மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார்.

திரு. பி. திருஞானசம்பந்தம் : தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் காசநோய் மருத்துவமனை சோமநாதபுரம் ஒன்றில்தான் இருக்கிறது. அது பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டது. அதை விரிவுபடுத்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.